தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 110/2023

LW:3, PW:3

03.06.2026

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 03 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அன்பழகன் | த / பெ. | திரு. சுப்பையன் |
| கிராமம் | : | பின்னவாசல் அண்ணாநகர் | தாலுக்கா | திருவாரூர் |
| தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) | வயது | 64 |

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல்விசாரணை

நான் திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வுபெற்று பின்னவாசல் அண்ணாநகரில் வசித்து வருகிறேன். நான் கடந்த 19.09.2021 ந் தேதி காலை 09.00 மணியளவில் திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய தலைமை காவலர் 131 திரு.பூபதி, முதல்நிலை காவலர் திரு. ஜானி இரஞ்சித் 1417 ஆகியோருடன் மதுவிலக்கு குற்றம் சம்மந்தமாக ராதாநஞ்சை கிராமத்தில் கண்காணித்த வந்தபோது ராதாநஞ்சை தலையாரி களம் என்ற இடத்தில் எதிரி வீட்டின் பின்புறம் ஒரு சாக்கு மூட்டையுடன் நின்று கொண்டிருந்ததால் போலிசாராகிய எங்களை கண்டவுடன் ஓர எத்தனித்த வரை பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்து விசாரிக்க முன்னுக்குபின் முரணான முகவரியை கூறி தனது பெயர் சேகர், வயது 54, த/பெ. சுப்ரமணியன் தலையாரி களம் ராதாநஞ்சை திருவாரூர் என்று கூறினார்.

பின்னர் அவர் நின்று கொண்டிருந்த இடத்தை சோதனை செய்து பார்த்தபோது ஒரு சாக்கு மூட்டையில் 15 லிட்டர் பிடிக்கக்கூடிய பாலிதீன் பையில் தலா 10 லி வீதம் 11 பாலிதீன் பையில் 110 லிட்டர் பாண்டி சாராயம் இருந்தது. அவர் பாண்டி சாராயம் வைத்திருக்க எந்தவித அரசு அனுமதியோ, அரசு உரிமமோ அவரிடத்தில் இல்லை. சட்டவிரோதமாக பாண்டி சாராயம் வைத்திருந்த வரை அதை இடத்தில் குற்ற காரணம் கூறி மேற்படி நபரை 09.00 மணியளவில் அவரை கைது செய்தும், அவர் வைத்திருந்த சாராயத்தை தலைமை

காவலர் 131 திரு.பூபதி என்பவர் முகர்ந்து பார்க்க கெட்ட நெடியுடன் கூடிய வாட வீசியதாகவும், அது மயக்கம் வருவதாக கூறினார். 110 லி பாண்டி சாராயத்தில் மகசரில் கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் முன் வராததால் கூட வந்த போலிசார் முன்னிலையில் 09.15 மணியளவில் சுமார் 650 ml பிடிக்கக்கூடிய 2 பாட்டில்களில் 500 ml வீதம் மாதிரிக்கு எடுத்து மகசர் தயார் செய்தும், மகசரில் தடயத்தை கைப்பற்றியும் ஆய்வாளர் அவர்கள் உத்தரவு படி மீதமுள்ள 109 லி விஷதன்மையுடைய பாண்டி சாராயத்தை சம்பவ இடத்திலேயே 09.30 மணியளவில் கொட்டி அழித்தும், அழித்தல் மகசர் தயார் செய்தேன்.

பின் எதிரி மற்றும் தடயத்துடன் 10.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய குற்ற எண்.780/2021 சட்டப்பிரிவு 4(1)(aaa), 4(1-A) TNP Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின் சாட்சிகளான பூபதி மற்றும் ஜானி இரஞ்சித் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் தடயமான விஷ நெடியுடன் கூடிய சாராயத்தை இரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்தி கொரானா தொற்று பரவல் காரணமாக அனுப்ப காலதாமதம் ஆகிவிட்டதால் இதில் விஷம் நீத்து போயிருக்கும். எனவே இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பினால் எதிரிக்கு சாதகமாக அமையும் என்பதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவு 4(1)(aaa), 4(1-A) TNP Act லிருந்து 4(1)(aaa) TNP Act ன் கீழ் சட்டப்பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் விசாரணையை முடித்து எதிரி மீது 4(1)(aaa) TNP Act ன் கீழ் 30.12.2021 ந் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

மதுவிலக்கு சம்மந்தமாக இருசக்கர வாகனத்தில் கண்காணித்து இருந்தோம். இருசக்கர வாகனத்தில் சென்றிருந்தோம் என்ற விவரத்தை முதல் தகவல் அறிக்கையிலோ, விசாரணை ஆவணங்களிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். இராதாநஞ்சை என்ற கிராமம் மக்கள் அதிகம் குடியிருக்கும் என்றால் சரிதான். அங்கிருந்து தனிநபர் யாரும் சாட்சியமளிக்க முன்வரவில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன தேதியில் ஆஜர் எதிரியை கைது செய்யப்படவில்லை என்றாலும், அவரிடமிருந்து தடய பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. தடய பொருள்

வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றாலும், குற்ற சம்பவத்திற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA
Date: 2026.06.03 17:06:42 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்